நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

**முன்னிலை: திரு. K. ஆனந்த், பி,ஏ., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 04 ஆம் நாள் சனிக்கிழமை

முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண். **91 / 2026**

CNR. No. TNTT07-002482-2026

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
கழுகுமலை காவல் நிலையம்,
குற்ற எண்– 126 / 2026. -- குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

சுப்புராஜ், (61/2026) த.பெ. கெங்கையா -- எதிரி

இவ்வழக்கு கடந்த 05.06.2026 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுக்காக அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 அவர்களும், எதிரி தானே முன்னிலை ஆகியும் இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

18.04.2026 ஆம் தேதி 06.00 மணிக்கு சாட்சி 1 ரேணுகாதேவி வீட்டில் சமையல் செய்து கொண்டிருந்த போது எதிரி, சாட்சி 1ன் வீட்டின் அருகில் உள்ள காலி இடத்தில் மக்காச்சோள மிஷின் வைத்து மக்காச் சோள கதிர்களை அரவை செய்து கொண்டிருந்த போது அரவை மிஷினில் இருந்து வரும் தூசி சாட்சி 1ன் வீட்டின் சமையல் அறை வரை அதிகமாக தூசி வந்ததும் சாட்சி 1, எதிரியிடம் வீட்டினுள் தூசி அதிகமாக வருகிறது தூசியை வேறுபக்கமாக திருப்பி விடுங்கள் என்று சொன்னதும், எதிரி, சாட்சி 1யை பார்த்து நீ ஏண்டி வந்து கேக்குற முண்ட ஏற்கனவே உன் புருஷன் பிரபு காலை உடைத்து வீட்டில் படுக்க வைத்தது போல் உன் கையை உடைத்து எதிரி மட்டை கட்டி விடுவேன் என்று கையால் முதுகில் அடித்து, சாட்சி 1 அங்கிருந்து செல்ல முயன்ற போது, எதிரி, சாட்சி 1ன் இரு கைகளையும் இருக்கமாக பிடித்து கீழே தள்ளி சாட்சி 1ன் அடிவயிற்றில் கையால் ஓங்கி குத்தியும், வயிற்றில் எட்டி உதைத்து சாட்சி 1யை பார்த்து தேவடியா முண்ட உன்னை ஒட்டு துணியில்லால் அசிங்கப்படுத்தாமல் விடமாட்டேன் என்று சாட்சி 1யை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து சாட்சி 1ன் நைட்டியின் முன்பக்கத்தை இறுக்கி பிடித்து கிழித்து பெண்மைக்கு களங்கம் விளைவித்து சாட்சி 1க்கு மனஉளைச்சலை ஏற்படுத்தியும், எதிரி அருகில் கிடந்த கட்டையை எடுத்து சாட்சி 1யை பார்த்து உன் புருஷன் கதி தான் உனக்கும், என்னைக்கு இருந்தாலும் உனது சாவு என் கையில் தான் என்று மிரட்டியதாக எதிரி மீது BNS பிரிவுகள் 296(பி), 115(2), 76, 351(3) மற்றும் பிரிவு 4 of

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.06 20:29:16 +0530

TNPHW Act படி கழுகுமலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

(2) எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானபோது எதிரிக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS பிரிவு 230 கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

(3) இவ்வழக்கில் எதிரி மீது BNS பிரிவு 76 படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது அமர்வு நீதிமன்றத்தில் மட்டுமே விசாரிக்கக்கூடிய தன்மை கொண்டதாக இருப்பதால் இந்த வழக்கினை BNSS பிரிவு 232 (அ) படி கனம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

(4) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் இல்லை.

(5) இவ்வழக்கின் எதிரி பிணையில் இருந்து வருவதால் தொடர்ந்து பிணையில் இருந்து வர அனுமதி அளிக்கப்படுகிறது.

(6) இவ்வழக்கின் ஆவணங்கள் மற்றும் தடயங்கள் அனைத்தும் BNSS பிரிவு 232 (இ) கு.வி.மு.ச படி அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படும்.

(7) இவ்வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுவது குறித்து அரசு மாவட்ட குற்றத்துறை வழக்கறிஞர் அவர்களுக்கு BNSS பிரிவு 232 (ஈ) கீழ் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

(8) எதிரியிடம் இவ்வழக்கை அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து நடத்த போதிய வசதி உள்ளதா என்பது குறித்து வினவிய போது எதிரி வசதி உண்டு என்று கூறினார்.

(9) எதிரி தூத்துக்குடி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் 06.08.2026 தேதி அன்று ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் நேரில் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 04 ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.06 20:29:22 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி